## நாடாளுமன்றத் தேர்தல்- 2024



நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சியும், மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இன்று (24.2.2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து தி.மு. கழகமும், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சியும் கலந்து பேசியதில் தி.மு.க. கூட்டணியில் – இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் **ஒரு** தொகுதியில் போட்டியிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

**<u>தொகுதியின் விவரம்</u>**

1. **35.இராமநாதபுரம்**

பிற கூட்டணிக் கட்சிகளின் இறுதி தொகுதிப் பங்கீட்டுக்கு உட்பட்டு இப்பட்டியல் உறுதி செய்யப்படும்.

(கே.எம்.காதர் மொய்தீன்)
தலைவர்,
இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி

24/2/2024
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

## நாடாளுமன்றத் தேர்தல்- 2024



நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியும், மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இன்று (24.2.2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து தி.மு. கழகமும், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியும் கலந்து பேசியதில் தி.மு.க. கூட்டணியில் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் **ஒரு** தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவது என தீர்மானிக்கப்பட்டது.

**<u>தொகுதியின் விவரம்</u>**

1. **17.நாமக்கல்**

பிற கூட்டணிக் கட்சிகளின் இறுதி தொகுதிப் பங்கீட்டுக்கு உட்பட்டு இப்பட்டியல் உறுதி செய்யப்படும்.

24/2
(ஈ.ஆர்.ஈஸ்வரன்)
பொதுச்செயலாளர்,
கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி

24/2/2024
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

## தமிழ்நாடு 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற வேண்டும் என்ற

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இலக்கை அடைய ஒருங்கிணைந்து செயல்படுவோம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, பிப். 26-**

**தமிழ்நாடு 2030 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார மாக மாறிட வேண்டும் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இலக்கை அடைய ஒருங்கிணைந்து செயல்படு வோம் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

சென்னை, கிண்டி சிப்காட் வளா கம், அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் துறை சார்பாக கட்டப்பட்ட 184 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களை திறந்து வைக்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய கட்டடங்களை திறந்து வைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

ஸ்டார்ட் அப் தமிழ்நாடு அமைப் பின் புதிய அலுவலகம், சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் சார்பில், கிண்டி மற்றும் அம்பத்தூரில் கட்டப்படுகின்ற அடுக்குமாடி தொழில் வளாகங்கள், தொழிலாளர் சங்கம் விடுதிகளை இன்று திறந்து வைத்திருக்கின்றோம்.

### கலைஞர் தொடங்கி வைத்த சிட்கோ நிறுவனம்!

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் என்கின்ற இந்த சிட்கோ நிறுவனத்தை நம் நூற்றாண்டு நாய கர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 1970ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சின் னஞ்சிறு தொழில்கள் பரவலான, விரைவான வளர்ச்சியையும் முன் னேற்றத்தையும் ஊக்குவிக்கின்ற வகையில் கலைஞர் அவர்கள் இந்த சிட்கோ நிறுவனத்தைத் தொடங்கி னார்கள்.

கலைஞர் அவர்கள் எந்த நோக்கத் திற்காக இதனைத் தொடங்கினார் களோ அந்த இலக்கை நோக்கி, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை வேகமாகச் செயல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் இன்று புதிய அடுக்கு மாடி தொழில் வளாகமாகவும், தொழி லாளர்கள் தங்குகின்ற விடுதியாகவும் நம் கண் முன்னே பார்க்கின்றோம்.

பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு இந்த அரசு எந்த அளவு முக்கி யத்து வம் கொடுக்கின்றதோ, அதே அள வுக்கு முக்கியத்துவத்தைச் சிறிய தொழில்களுக்கும் கொடுத்து வருகின் றது. மிகப்பெரிய தொழிற்சாலைகள் வளர்ச்சிக்கு அச்சாரமாக இருக்கக்கூ டியவைதான் இந்தச் சிறு தொழில் நிறுவனங்கள். இன்றைக்கு இந்திய ஒன்றியத்தில் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கின்றது.

### தமிழ்நாடு முதல் இடம்

தொழில் தொடங்க ஏற்ற மாநிலம் என்ற பட்டியலில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கி றது. மின்னணுப் பொருட்கள் ஏற்று மதி எக்ஸ்போர்ட்டில் இந்தியாவி லேயே தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடித்திருக்கிறது. இந்தியாவில் பணிக் குச் செல்கின்ற பெண்களில் 43 சதவி கிதம் பெண்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமை நம் தமிழ்நாட்டிற்கு உண்டு.

நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை இப்படி நாம் சொல்லிக் கொண்டே போகலாம். தொழில் துறை வளர்த்தெடுக்கச் சிட்கோ, சிப் காட் போன்ற நிறுவனங்களை, ஏறத் தாழ 55 ஆண்டுகளுக்கு முன்பே கலைஞர் அவர்கள் உருவாக்கினார் கள். எதிர்காலத்தில் என்னென்ன மாதிரியான மாற்றங்கள் வரும், பொருளாதார வளர்ச்சி எந்தெந்த திசையில் எந்த அடிப்படையில் செல் லும் என்பதையெல்லாம் தன்னு டைய அறிவாலும், அனுபவத்தாலும் கலைஞர் அவர்கள் உணர்ந்து செயல்படுத்தினார்கள்.

அதனால்தான் கலைஞர் அவர் களை `தமிழ்நாட்டின் சிற்பி'என்று நாம் அழைக்கின்றோம். கலைஞர் அவர்கள் உருவாக்கிய சிட்கோ, சிப் காட்டில் உள்ள தொழிற்சாலைகளின் மூலமாக லட்சக்கணக்கான இளை ஞர்கள் வேலை வாய்ப்பை பெறுகின் றார்கள். பாரம்பரியமாக இருந்து வரும் விவசாயம் போன்ற தொழில் களோடு நவீனமான மாடர்ன் எக்கா னமியில் உருவாகி வரும் தொழில்க ளும், தொழிற்சாலைகளும் வளர்வ தற்கு ஏற்றமாதிரி அரசின் கொள்கை களை கலைஞர் அவர்கள் உருவாக் கியதன் பலனைத்தான் இன்றைக்கு தமிழ்நாடு அனுபவித்துக் கொண்டி ருக்கிறது.

வட மாநிலங்கள் தவறவிட்ட இந்த இடத்தை கலைஞர் அவர்கள் சரியா கப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதனால்தான் வட மாநிலங்கள் பல வற்றில் விவசாயத்தைத் தவிர, வேறு தொழில் வாய்ப்புகள் இல்லாமல், நிறைய மைக்ரேஷன் வொர்க்கர்ஸ் வேலை வாய்ப்புக்காக தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய அந்த மைக்ரேஷன் வொர்க்கர்சின் நலனையும் நம் திராவிட மாடல் அரசு பாதுகாத்து வருகிறது.

### முதலமைச்சரின் தனிக் கவனம்!

தொழிற்துறை வளர்ச்சிக்கு கலை ஞர் அவர்கள் காட்டிய ஈடுபாடு போலவே, நம் மாண்புமிகு முதல மைச்சர் அவர்களும் தனிக் கவனம் எடுத்து செயல்படுத்தி வருகின்றார் கள். கழக அரசு அமைந்தது முதல் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் கள் துறைகள் பல்வேறு சாதனைக ளைப் படைத்து வருகின்றன. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இந்தத் துறையின் சார்பாக மட்டும் 63 ஆயி ரத்து 573 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன.

இதன் மூலம் 2 லட்சத்து 51 ஆயி ரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக உள்ளன. கழக அரசு ஆட் சிக்கு வருவதற்கு முன்பு வரை ஸ்டார்ட் அப் தொழில்களில் தமிழ் நாடு இந்திய அளவில் கடைசி இடத் தில் இருந்தது. கழக அரசு பொறுப் பேற்ற பின் `ஸ்டார்ட் அப் தமிழ்நாடு' என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. அதன் பிறகு 2021ஆம் ஆண்டில் ஸ்டார்ட் அப் தொழில்களில் தமிழ் நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

இன்றைக்கு 2022ஆம் ஆண்டுக் கான தரவரிசைப் பட்டியலில் முதலி டத்தைப் பிடித்து, இந்தியாவிலேயே நம்பர் ஒன் இடத்தில் நம் ஸ்டார்ட் அப் தமிழ்நாடு நிறுவனம் இயங்கி வரு கின்றது. அதற்காகப் பல்வேறு விருது களை வாங்கி இருக்கிறோம். லீடர் என்ற விருது, சிறந்த செயற்பாட்டாளர் களுக்கான விருது போன்ற விருதுக ளையும் நம்முடைய நிறுவனம் பெற் றுள்ளது.



### ஸ்டார்ட் அப்க்காக நிதி ஒதுக்கீடு!

ஸ்டார்ட் அப் நிறுவனங்களை உரு வாக்க புத்தொழில் முனைவோரு க்கான ஆதார நிதி டேன்சிட் திட்டத்தின் கீழ், இதுவரை 132 ஸ்டார்ட் அப் நிறு வனங்களுக்கு 13 கோடியே 95 லட் சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட் டுள்ளன. அது மட்டுமல்லாமல் பட்டியல் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோரின் 30 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு 43 கோடியே 65 லட்சம் ரூபாய் நிதி உதவி, நம் அர சால் பங்கு முதலீடாக வழங்கப்பட்டுள் ளன.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தை உருவாக்கி னோம். இதன் மூலம் 1,612 பட்டியல் மற்றும் பழங்குடியினர் தொழில்மு னைவோருக்கு ரூபாய் 187 கோடி மானியத்துடன் ரூபாய் 580 கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்கப்பட் டுள்ளது. இந்தச் சாதனையின் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு முன்பு, நம் சி.எம். ஆர்.எல் கட்டடத்தில் உள்ள பத்தாவது தளத்தில் 5 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகத் தைத் திறந்துவிட்டுத்தான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கின்றோம்.

தமிழ்நாடு சிட்கோ கிண்டி தொழிற் பேட்டையில் 94 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அடுக்குமாடி தொழில் வளாகமும் இப்போது திறக் கப்பட்டுள்ளது. அதேபோல் அம்பத் தூர் தொழிற்பேட்டையில் 63 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட் டில் புதிய அடுக்குமாடி தொழில் வளா கம் திறக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் தங்கி நன்றாக ஓய்வு எடுக்கின்ற வகையில் ஐந்து மாடிகள் கொண்ட தொழிலாளர்கள் விடுதி இங்கே கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சிறு தொழில் வளர்ச் சிக்காக இவ்வளவு சிறப்பான உட்கட் டமைப்பு வசதிகளைத் துறையின் அமைச்சர் அண்ணன் அன்பரசன் அவர்கள் உருவாக்கி, அவற்றைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பை எனக் குக் கொடுத்ததற்கு மீண்டும் என்னு டைய நன்றியை தெரிவித்துக் கொள் கின்றேன்.

தொழில்துறை வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் எவ்வளவு முக்கியத்து வம் கொடுக்கின்றார் என்பதற்கு சமீ பத்தில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் அறிவிப்புகளே அதற்கு சாட்சி. குறிப் பாக, பட்ஜெட்டில் 3 ஆயிரத்து 14 ஆயி ரம் கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட் டில் உள்ள 45 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளை இண்டஸ்ட்ரீஸ் 4.0 ஸ்டேண்டர்ஸ் அளவிற்குத் தரம் உயர்த்துவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### மூன்று புதிய தொழிற்பேட்டைகள்!

தமிழ்நாட்டில் உள்ள 71 அரசு ஐ. டி.ஐ நிறுவனங்களிலும் 2,877 கோடி ரூபாய் செலவில் சென்டர்ஸ் ஆஃப் எக்சலன்ஸாக தரம் உயர்த்தப்பட உள்ளது. சிட்கோ மூலம் 32 கோடி ரூபாய் செலவில் ஒட்டன்சத்திரம், மானாமதுரை மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிக ளில் மூன்று புதிய தொழிற்பேட்டை கள் உருவாக்கப்பட உள்ளன.

இதேபோல் தொழில் வளர்ச்சிக் காக எண்ணற்ற அறிவிப்புகளும் திட் டங்களும் பட்ஜெட் அறிவிப்பில் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற நம் முதல மைச்சரின் இலக்கை அடைய நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்பளித்த உங்கள் அத்தனை பேருக்கும் மீண் டும் என்னுடைய நன்றியைத் தெரி வித்து விடைபெறுகின்றேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிர மணி யன், பி.கே.சேகர்பாபு, சென்னை மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பிரபாகர் ராஜா, துணை மேயர் மகேஷ்குமார், துறையின் அரசு செயலாளர் அர்ச்சனா பட்நாயக் ஐ.ஏ.எஸ், சிட்கோ மேலாண்மை இயக்குநர் மதுமதி ஐ.ஏ.எஸ்., மாநக ராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, சந்தி ரன், மூர்த்தி, சிட்கோ அமைப்பின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.